Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை ரூபா 5-00

Nallur Branch Library

Nallur Branch Library


# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 28 (11.5.94) புதன்கிழமை ஓசை 82


## க. பொ. த. (சா\த) மாணவர்களுக்கு செய்முறைப்பரீட்சை இன்னுமில்லை

1993ஆம் ஆண்டு க. பொ. த. (சா-த) பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகள் இன்னமும் யாழ். மாவட்டத்தில் நடைபெறவில்லை. இச் செய்முறைப் பரீட்சை ஏனைய மாவட்டங்களில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்று பெறுபேறுகளும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது சம்பந்தமாக யாழ் கல்வித் திணைக்கள வலயம் - ஒன்று கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை தயாரிப்பதற்கான கணணிக்குரிய காகிதாதிகள் இன்மையாலேயே இப் பரீட்சை தாமதமாகுவதாக தெரிவிக்கப்பட்டது. இதைவிட இங்கிருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலின்முன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியது அவசியம்

### எம். பிக்கள் சந்திப்பு

சகல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா சந்தித்து அந்தந்த மாவட்ட அடிப்படை பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கூறி வருவதாக 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியாக தற்போது இச்சந்திப்புநடைபெற்றுவருவதுடன் உடனடியாக தீர்வு வழங்கப்பட்டு வருவதாகவும் (4ஆம் பக்கம் பார்க்க)

## கண்டியில் வெளிவிவகார அமைச்சர் ஹமீட்

(கொழும்பு)

**ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இவற்றிற்கு முன்பாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியமாகும். ஆனால் இனப்பிரச்சினையை தேர்தலுடன் தொடர்புபடுத்தாது அதை அரசியலாக்காது தனியாக எடுத்து தீர்க்கவேண்டும் என வெளியுறவு அமைச்சர் ஹமீட் கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.**

இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்திய மாதிரியிலான சமஷ்டி திட்டம் ஒன்றை வழங்குவதெனவும் சுயாட்சியை வழங்குவதில்லை எனவும் இக்குழு முடிவு செய்தது. ஆனால் இதனை தமிழ் கட்சிகள் ஏற்கவில்லை. இதனால் மீண்டும் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை காணவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இதற்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொ... முயற்சிகள் செய்யப்பட்டன. இவை எவையும் பயனளிக்கவில்லை. இக்காலத்தில் தீவிரவாத நடவடிக்கைகளும் அதிகரித்தன. தொடர்ந்து இந்திய தலையீடும் நடந்தது.

தெரிவுக்குழு முன்வைத்த தீர்வுகளை நாம் பரிசீலனைக்கு எடுக்க வேண்டும் பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறுவதால் பொருளாதாரம் எழுச்சிபெறுவது தடுக்கப்பட்டுவருகிறது. எனவே தேர்தலை நோக்கமாக கொள்ளாது பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட வேண்டும் என அமைச்சர் ஹமீட் மேலும் தெரிவித்தார்.

## நேற்று நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாக பதவியேற்பு

(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா நேற்று உலகத்தலைவர்கள் முன்னிலையில் பதவி ஏற்றார். இந் நிகழ்வை உலகம் முழுவதிலும் உள்ள கோடிக்கணக்கனோர் தொலைக்காட்சி மூலம் பார்த்தனர்.

ஜனாதிபதி பதவி ஏற்கும் நிகழ்ச்சியில் மண்டேலாவுடன் அவரின் மூத்த மகள் அமர்ந்திருந்தார் அவர் மண்டேலாவின் முதல் மனைவியின் மகளாவார்.

இப்பதவி ஏற்பு வைபவத்தில் உலகின் பல பாகங்களிலும் இருந்து தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

1963இல் அமெரிக்க ஜனாதிபதி கெனடியின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களின் தொகைக்கு பின்னர் மண்டேலாவின் பதவி ஏற்பிற்கே இவ்வளவு தொகையில் உலகத் தலைவர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படு (4 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டைவிட்டு வெளியேறுமாறு தமிழ் அகதிகளுக்கு சுவிஸ் அரசு கடிதம்

(கொழும்பு)

சிலருக்கு உடனடியாக ... நாட்டைவிட்டு வெளியேறு...

## ராணுவம் பதுங்கித் தாக்கியதில் மேஜர் தனுசன், ஆதரவாளர் வீரச்சாவு

ளோம். இதற்கான முயற்சி கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நாட்டின் முக்கிய கட்சிகளான ஐ. தே. கவும், சுதந்திரக் கட்சியும் பிரச்சினைக்கான தீர்வைக் காணும் பொறுப்பைக் கொண்டுள்ளன.

1983இன் பின் இப்பிரச்சினைக்கு தீர்வு காண பல்வேறு

(கொழும்பு)

சுவிசில் உள்ள இலங்கை அகதிகளுக்கு அந்நாட்டு அரசு அவர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கடிதங்களை அனுப்பியுள்ளது இங்குள்ள அகதிகளுக்கு வெவ்வேறு வகையான கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

சிலருக்கு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறும், சிலருக்கு மூன்று மாதங்களினுள் நாட்டைவிட்டு வெளியேற ஏற்பாடு செய்யுமாறும், சிலருக்கு நாட்டைவிட்டு வெளியேறுவது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யலாம் என்ற சலுகையுடன் கடிதங்கள் சுவிஸ் அரசால் அனுப்பப்படுகின்றன.

## பொலிசார் கொலையுடன் ஜிகாத்திற்குத் தொடர்பு

(கொழும்பு)

ஏறாவூரில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பஸ்ஸினுள் வைத்து கொல்லப்பட்டது தொடர்பாக மூன்றாவது நபர் ஒருவர் ஹிங்குராக்கொடவில் கைதாகியுள்ளார். இவரிடமிருந்து இரு துப்பாக்கிகளும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த மாதம் 19 ஆம்திகதி ஏறாவூரில் பஸ்ஸினுள் இப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவிரிகோலமாகநிறுத்தி பெண்கள் மீது சோதனை

(கொழும்பு)

தாண்டிக்குளத்தில் தலைவிரிகோலமாக்கி தமிழ்ப் பெண்கள் சோதனையிடப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி வந்த தமிழ்ப் பெண் ஒருவர் தனது கொண்டையினுள் சிறிய பற்றறிகளை எடுத்து வந்ததாகவும் அதனை அடுத்தே மேற்கண்டவாறு பெண்கள் சோதனை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மேலும் ஒரு மீனவர் கடற்படையால்கைது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு குடத்தனை கடற்பிராந்தியத்தில் வைத்துரோந்து சென்ற கடற்படையினர் ஒரு மீனவரைப் பிடித்துச் சென்றுள்ளனர்.

வடமராட்சியில் மூன்று தினங்களில் இரண்டாவது சம்பவமாக நேற்றுக்காலை 6.30 மணிக்கு இது நிகழ்ந்துள்ளது.

குடத்தனை பொற்பதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை-கனகரட்ணம்( வயது 45) என்பவரையே கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இவர் எடுத்துச் சென்ற வள்ளம், வலைகள் என்பன கடலில்கைவிடப்பட்டன எனவும் தெரியவருகிறது. மேலும் இப்பிராந்தியத்தில் காணப்பட்ட மீனவர்களை நோக்கி பீரங்கித் தாக்குதலும் துப்பாக்கி வேட்டுக்களும் ஏவப்பட்டன. இதன்போது சில படகுகள், கட்டுமரங்கள்சேதமடைந்தன.

மீனவர்கள் மீது கடற்படையினர் கண்மூடித்தனமான முறையில் தாக்கிக் கொண்டிருந்த வேளை கடற்புலிகள், கடற்படையினர் மீது எதிர்த் தாக்குதலைத் தொடுத்ததை அடுத்து கடற்படையினர் விலகிச் சென்றனர். (யோ)

### எறிகணை வீச்சு

தொண்டமனாறு அக்கரைப் பகுதியை நோக்கி பலாலியில் இருந்து ஏவிய பல ஆட்லறி ஷெல்கள் விழுந்து வெடித்தன. நேற்று பகல் 9.55 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது. அப்போது உலங்கு வானூர்தி ஒன்று அப்பகுதியை வட்டமிட்டு நோட்டமிட்டது. (யோ)

## ஜேர்மன் ரி.வி. நிலைய விவகாரம் மத்திய அரசு தலையிட முடியாது

### -ஜேர்மன் தூதரக அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

பேர்லின் நகரில் இயங்கும் இலங்கைத் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான ரி.வி. நிலையத்தை மூடும்படி சிறிலங்கா அரசு ஜேர்மன் அரசைக் கேட்டுள்ளது என்பதை ஜேர்மன் தூதரக அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

ரி.வி. நிலையங்கள் அந்தந்த மாகாண அரசுகளின் அதிகார எல்லைக்கு உட்பட்ட விஷயம், அதில் மத்திய சமஷ்டி அரசு தலையிட முடியாது ஆனால் அரசியல் பிரசாரச் செய்திகளை ஒளிபரப்பினால் அதில் மத்திய சமஷ்டி அரசு குறுக்கிடலாம் என்று தூதரக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தமிழருக்குச் சொந்தமான அந்த ரி.வி. நிலையம் கலாசார மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைஒளிபரப்புகிறது. அதில் தலையிட முடியாது என்றார் அவர். வெளியுறவுச் செயலர் பேனாட் திலகரெட்ணா பொன்நகர் போகவுள்ளார் என்ற பத்திரிகைச் செய்தி பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர், வெளியுற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பண்பாட்டுக்கழக மாநாடுகனடாவில் நடக்கும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் ஆறாவது மாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 19,20,21-ம் திகதிகளில் கனடாவின்றொரன்ரோவில் நடைபெறவிருக்கிறது. இலங்கை, தமிழ்நாடு, மலேசியா போன்றநாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்மக்களுக்கிடையே தமிழ்ப் பண்பாடு மருவியோ மறைந்தோ போகாவண்ணம் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன்இம் மாநாடு நடத்தப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக் கழகத்தின் முந்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொலராவிற்கு பெண் பலி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் 'கொலரா' நோய்க்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் பலியானார்.

நீக்கிலஸ்-சுசிலா (வயது 31) என்ற பெண்ணே இவ்வாறு மரணமானவராவார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்-

## மேஜர் தனுசன், ஆதரவாளர் வீரச்சாவு

### மூன்று பொதுமக்களும் பலி

(திருகோணமலை)

திருமலை மாவட்டம் கட்டைபறிச்சான் கணேசபுரம் என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும் முழுநேர ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர். இதன்போது மூன்று பொதுமக்களும் கொல்லப்பட்டனர் இச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

வீரச்சாவடைந்த போராளி மேஜர் தனுசன் ( சூழாமணிச் செல்வன் (முத்துககுமார் சிவனேசன், திருகோணமலை) முழுநேர ஆதரவாளர் கோணமலை பிரபா (திருகோணமலை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



மேஜர் தனுசன்
(சூழாமணிச் செல்வன்)

## போதிய பாதுகாப்பு இல்லை; சந்திரிகா குறைகூறுகின்றார்

(கொழும்பு))

மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க, தனக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என குறை கூறியுள்ளார்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என தான் அரசாங்க மேலிடத்திற்கு பலமுறை புகார் செய்துள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## காமினியின் இடத்திற்கு புதியவர் நியமனம்

மத்திய மாகாணசபை உறுப்பினர்களாக இருந்த ஐ. ஐ. தே. முவை சேர்ந்த காமினி திஸ்ஸநாயக்கா, சரத் அமுனுகம ஆகியோரின் இடங்களுக்கு அதே கட்சியை சேர்ந்த ராஜா சேனநாயக்க, சரத்தபவினன ஆகிய இருவர் நியமிக்கப்படவுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க]

## காமினியை இணைத்துக் கொள்ளும் நேற்றைய முயற்சியும் தோல்வி

### தேசிய பட்டியல் பா. உகள் பதவி துறக்க மறுப்பு

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக்குவதற்கு நேற்றுக்காலை ஐக்கிய தேசியக் கட்சி எடுத்த முயற்சி காரசரமான விவாதத்தின் பின் மீண்டும் ஒத்திப் போடப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமைக் காரியாலயமான சிறிகோத்தாவில் நடைபெற்ற மேற்படி கூட்டம் புதிய பொதுச்செயலாளர் டக்டர் காமினி விஜேசேகரவின் தலைமையில் நடைபெற்றதாகவும் இதில் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

மேற்படி கூட்டத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை உயர் பீடத்தில் விரைவில் பெரும் மாற்றம்

(கொழும்பு)

கடற்படையின் உயர் பீடத்தில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக காத்துள்ளன- கடற்படை அதிகாரிகள் நிலைத் தலைவர் கொமடோர் சிசில் திசரா தற்காலிக ரியர் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்' இவர் பாகிஸ்தானில் உயர் அதிகாரிகள் பயிற்சி முடித்து ஜூன் நடுப் பகுதியில் நாடு திரும்பவுள்ளார்.

தற்போதுசிசில் திசராவிற்கு பதிலாக அதிகாரிகள் நிலைத் தலைவராக பதவி வகிக்கும் கொமடோர் ரி.கே. தசநாயக்கா திருமலையை தலைமை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மாகோசின் பூச்சிகொல்லி**

வயல் தோட்டப் பயிர்களைப் பூச்சிகளிலிருந்து பாதுகாக்க அதி உன்னத பூச்சி கொல்லி ''மாகோசின்'' எனக் கண்டறியப்பட்டுள்ளது. பாவித்துப்பயன் அடைந்தோர் பாராட்டுகிறார்கள். யாழ் நகரில், மின்சார நிலைய வீதியில் ''லங்கெம்'' ஸ்தாபனத்திலும் விற்பனைக்குண்டு ''மில்க்வைற்'' (சி-9377)

**பாம் போஷா**

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமானசத்துணவு பாம்போஷா .ப.அ. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது. (சி/9332)

**தவறிவிட்டது**

8-5-94 அன்று கிளாலிக் கரையில் உடுப்புகள் அடங்கிய உரபாக் ஒன்று தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R V.G மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்! (8246)

**சுகாதாரக் கருத்தரங்கு**

தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், சாவகச்சேரி வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து கெற்பேலி பண்டிதர் குடியிருப்பில் சுகாதாரக் கருத்தரங்குகளை தொடர்ச்சியாக நடத்தியுள்ளனர் இக் கருத்தரங்குகளில், சுகாதார பிரச்சினைகளும் தொற்று நோய்களும், ஆரம்ப சுகாதாரத் தடை, தொழு நோய்த் தடை, சுற்றாடல் சுகாதாரம், பற் சுகாதாரம், கர்ப்பவதிகள் போசாக்கு, தாய்ப்பால் ஊட்டல் போன்ற தலைப்புகளில் கருத்துரை வழங்கப்பட்டது.

## பணச் சுற்றோட்டம் சீரடைந்து வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் திரவ நிலைப் பணத்தின் சுற்றோட்டம் சீரடைந்து வருகிறது. நீண்ட நாட்களாக திரவ நிலைப் பணத்தின் சுற்றோட்ட சமநிலை குழம்பியிருந்தது. இதனால் பல மட்டங்களில் பல சிரமங்கள் ஏற்பட்டன, தற்பொழுது மேற்படி சுற்றோட்டம் படிப்படியாக சீரடைந்து வருவதாக வங்கி அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர். (க)

**G. A. Q. 1st. in Com.** | **95**

யாழ் பல்கலைக்கழக வெளிவாரி
பாடநெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்
14-05-94 காலை 8 மணி
விபரங்களையும் நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.
(சி/9383)

**மொழிபெயர்ப்பாளர்கள் தேவை**

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை.

விண்ணப்பங்கள் யாவும் 25 05. 94க்கு முன்னர் எமக்கு கிடைக்குமாறு விண்ணப்பிக்கவும்

தொடர்பு:-
விள. இல. 331,
மேலாளர் ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 9379)

## 45-ம் நினைவு கூரும் நாள்

தாய் மடியில் :
19 - 12 - 1972

தாயக மண்ணில் :
28 - 03 - 1994



மணலாற்று பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

**கப்டன் கட்டப்பொம்மன்**
(நீல்குமார் ராஜ்குமார்
(பொன்னாலை, மூளாய்)

இரு கண்ணின் ஒளி மணியே!
இதயம் எல்லாம் அன்புத்தேன் பொழிந்த பூவே
இரு கண்ணின் ஒளி மணியே கட்டப் பொம்மா,
உதயமெழும் செங்கதிரே ராஜ்குமார,
பாசம் வழியும் உன்முகம் காணாதே
நிதமழுதே நெஞ்சுருகி கண்ணீர் ஆற்றில்
நீந்தி மனச்சாந்தி யில்லா தேங்குகின்றோம்
அதிமதுரப் பேரின்ப மனைவாழ்கின்றாய்
அமலன் அருள் கிருபை வளம் அள்ளித்தாராய்,

11-5-94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் சக பேராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வழக்கம்பரை, தொல்புரம் கிழக்கு (8247) அப்பா, அம்மா. சகோதரன்.

## நினைவு கூருகின்றோம்..
## 11.05.1994

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கல்லடி முகாமில் வைத்து சிறிலங்கா அதிரடிப் படையினரால் கொலை செய்யப்பட்ட,

**நாதன்** (கந்தசாமி சிவநாதன் - திருப்பழுகாமம் - மட்டு)

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**சிவா** (சிவலிங்கம் சிவானந்தன் - பதுளை)

1991ஆம் ஆண்டு வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த,

**சைமன்** (கந்தையா சந்திரபாலன் - தர்மபுரம் - கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவு - தட்டுவன் கொட்டிப் பகுதியில் சிறிலங்கா தெ டர் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**லெப். லக்சன்-ரவிசங்கர்** (மகாலிங்கம் கௌரி முகுந்தன் - சாம்பல்தீவு - திருமலை)

**2- லெப். கலிக்ஸ் சாந்தன்** (கந்தையா பாலசுப்பிரமணியம் - 1-ம் யூனிற், திருவையாறு - கிளி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-9381)

## அறிவித்தல்

**கோப்பாய் தெற்கு - இருபாலை**
**கற்பக விநாயகர் ஆலயம்**

மேற்படி ஆலயத்தில் 30-4-94 சனிக்கிழமை பி.ப. 5-00 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் பரிபாலன சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டதாக 7-5-94 பத்திரிகையில் (8210) வெளிவந்த விளம்பரம் தவறானதும், பிழையானதும் ஆகையால் அதனை வாபஸ் பெறுகின்றோம்.

நா. சுந்தரலிங்கம்
க. இரவீந்திரகுமாரன்
க. வருணநாதன்

(8252)

தலைப்புகளில் கருத்துரை வழங்கப்பட்டது.

**SPOKEN ENGLISH**
**by**
**BRITTO**

**புதிய பிரிவு**
**ஆரம்பம்**
**14 05-94**
(1 மணி)

**புதிய**
**உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(சி-9384)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ''ஐரோப்பிய ஒருங்கிணைவும் இலங்கையின் எதிர்கால வர்த்தகமும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பி.ப 2 மணிக்கு பொருளியற் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் இத்தலைப்பின் கீழ் பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர் நந்தகுமாரன் அவர்கள் உரையாற்றுவார் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஃ ஃ

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சர்வமத மகா சபைப் பிரசங்க நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருநெல்வேலி ராமகிருஷ்ணாலய மாணவிகளால் பாடசாலைகள் தோறும் நடாத்தி வரும் வீரத்துறவி வில்லிசை நிகழ்ச்சி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நாளை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது

ஃ ஃ

இளங்கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடாக வெளிவந்துள்ள கவிதை இதழின் அறிமுக விழா இன்று பிற்பகல் மூன்று மணியளவில் யாழ் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது மறுமலர்ச்சிக்கழக ஆதரவில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ரி. வேல்நம்பி, செல்வி மைதிலி அருளையா, கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோரின் உரைகள் இடம் பெறவுள்ளன

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தரம் III பதவிக்கு பொருத்தமான ஆண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-06-03 ஆம் தேதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத் திட்டம்:**
ரூபா 2890 - 10 X 55 - 7X65 - 3895/- மாதமொன்றுக்கு)

**தகைமைகள்:**
சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரீட்சையில்சித்திபெற்று சித்தி பெற்றதிலிருந்து குறைந்த பட்சம் மூன்றாண்டு அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:**
40 வயதிற்கு மேற்படலாகாது

**தெரிவு:**
உளச்சார்பறியும் தேர்வு நேர்முகத் தேர்வு ஆகியனவற்றின் மூலம்
மேற்குறித்த சம்பளத்துடன் 1994 டிசம்பர் 31 ஆம்தேதிவரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.
9/93 இலக்க 1993 மே 12ஆம்தேதியபொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்,
மாதாந்தப் பல்கலைக்கழகப் படியாக 500/- ரூபா செலுத்தப்படும்.
மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியாக ரூபா 260/- செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் அல்லது இப் பல்கலைக்கழக சிறாப்பரின் முகப்பு மேசையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடியபடிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும் படிவங்களையும் இதர விவரங்களையும்தபால் மூலம்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியுடைய காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை 23X10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.


அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு விண்ணப்பிக்கமுடியும். அவ்வாறான விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 70ஆகும். ஓய்வு பெற்றவர் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் ஓய்வு பெற்றபோது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவுதேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும்நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994- 05-07
(சி-9382)

---

## ஆறாத் மாறாத நினைவு



**லெப். கேணல் - சூட் (அருணன்)**
(நவரெட்ணம் - விக்கினராஜன்)

தாயின் மடியில்: **31.05.1967**
தாயக மண்ணில்: **11.11.1993**

தமிழீழ பெரும் களத்தில்
தவளை எனும் தாக்குதலால்
திசை எட்டும் புகழ் பரப்பி
தீந்தமிழீன் உரம் சேர்த்த
ஈழத்து நாயகரே ......!
இனியபுலி சூட்டா அருணன்
இச்சமரில் உயிர் நீத்த
அத்தனை மா வீரர்களே
ஆறுமாதம் ஆனதையா !
ஆறாது ஈழம் வரை...!

- குடும்பத்தினர்

(சி-9375)

---

க. இரவீந்திரகுமாரன்
க. வருணநாதன்
(8252)

---

## அறிவித்தல்

**தட்டுப்பாடின்றி படச்சுருள்**
பெற்றுக்கொள்ள...

என்னும் எமது திட்டத்திற்கமைய 20-4-94 ற்கு முன்னர் பதிவு செய்த வாடிக்கையாளர்களிற்கான படச் சுருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
20-5-94 ற்கு முன்னர் நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகம்
**கலக்சி புகைப்பட சேவை**
யாழ்ப்பாணம். (8251)

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
**28. 09. 1976**

வீரச்சாவு
**28. 03. 1994**

**2-ம் லெப். இளந்திரையன்**
(திருநாவுக்கரசு சசிகரன்)

(28.03 94 அன்று காலை 6 மணியளவில் முல்லை மாவட்டம் தண்ணி முறிப்பு என்னுமிடத்தில் சுற்றி வளைக்கும் நோக்குடன் வந்த இராணுவத்துடனான கடும் மோதலில் வீரச்சாவடைந்தார்)

பாங்கானதொரு தமிழீழ தேசமதை
ஓங்காரமாக அமைத்திடவென்று
செங்களமாடி சிந்திய குருதி எம்மில்
சங்கமமாகி சரித்திரமாகி மனங்களில்
நீங்காமல் நிலைத்துவிட்டாய் நீ.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

11 5 94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
- குடும்பத்தினர்
(8213)

Nallur Branch Library



### சிந்தனைக்கு

கண்கள் குருடாக வேண்டுமென இதயம் விரும்பும் போது கண்கள் காண்பது இல்லை. இருள் பூமியைக் கவ்வுவது போல ஆசை வாய்மையை மூடி மறைக்கும்.

- செனெகா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05

## டி. பியின் திட்டம்

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா ஆகியோரின் சர்வாதிகாரப் போக்கிற்கு தான் சற்றும் சளைத்தவன் இல்லை என்பதை டி. பி. விஜேதுங்கா தற்பொழுது நிரூபித்து வருகின்றார். இதற்குப் பல உதாரணங்களை கூற முடியுமாகிலும், பாராளுமன்றத் தேர்தலின் முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென்ற டி. பி. விஜேதுங்காவின் முடிவு சிறப்பான உதாரணமாகும்.

அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள ஐ. தே. கட்சியினர் இவ்வருடத்தில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தல், அடுத்த வருட ஆரம்பத்திற்குள் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தல் என்பனவற்றால், 17 வருட காலமாக தாம் வைத்திருந்த அரசியல் அதிகாரம் கைமாறி விடுமோ என அஞ்சத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில்தான், இவ்விவகாரத்தை ஆராய்ந்த ஐ. தே. கட்சியின் செயற்குழுவானது, பாராளுமன்றத் தேர்தலை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் வைப்பது சிறப்பானதாக அமையும் எனச் சிபார்சு செய்தது. இதேசமயம், இவ்விவகாரத்தைப் பரிசீலித்த அரசியல் விவகார சட்ட அமைச்சு இரு தேர்தல்களையும் ஒரே காலப்பகுதியில் நடத்துவது சிறப்பானதென ஆலோசனை கூறியது.

இதில் செயற்குழுவின் தீர்மானமானது, ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஐ. தே. கவிடம் இருக்கும் பொழுது நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி ஏற்படுமாகிலும், மாற்று நடவடிக்கை எதைப் பற்றியும் சிந்திக்கலாம் என்ற அடிப்படையிலானதாகும். இதேசமயம் அரசியல் சட்ட விவகார அமைச்சின் ஆலோசனையானது மக்கள் மத்தியில் ஒரு தேர்தலின் தாக்கம் மற்றைய தேர்தலை பாதிக்காத வகையில் வாக்கெடுப்பை நடத்தி விடுவதாகும்.

ஆனால், இவை இரண்டும் சிறீலங்கா ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளதோடு, ஜனாதிபதித் தேர்

# மன்னம்பிட்டியில் கைதான 19 தமிழர் விடுவிக்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மன்னம்பிட்டி கிராமத்தில் வைத்து கடந்த தைப்பொங்கல் தினத்தன்று சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்ட பத்தொன்பது தமிழர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

19 - 40 வயதுக்கு இடைப்பட்டவர்களான இவர்கள் மீது எதுவித விசாரணையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும், வழக்குகள் எதுவும் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

இவர்களில் பத்துப்பேர் பொலனறுவையிலும் ஒன்பது பேர் ஹபறணையிலும் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் மட்டக்களப்பில் புதிதாகதிறக்கப்பட்டுள்ள புனர்வாழ்வுமுகாமிற்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புனர்வாழ்வு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படும் தமிழர்கள் வருடக்கணக்காக விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவது குறிப்பிடக் கூடியதாகும்

## முறைசாராக்கல்வி பிரிவுக்கு 5,50,400 ரூபா ஒதுக்கீடு

(நல்லூர்)

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இவ்வாண்டு முறைசாராக் கல்வித் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு ஐந்து லட்சத்து ஐம்பதாயிரத்து நானூறு ரூபாவை (5,50,400) வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மாகாணக்கல்விப்பணிப்பாளர் க. தியாகராசா யாழ் கல்விப் பிராந்திய பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

இவ் ஒதுக்கீடு கல்விவலயம் I, II என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டின்படி இரு கல்வி வலயங்களுக்கும் ஏ, பீ வகைப்பயிற்சி நெறிகளுக்கென 3,26,400 ரூபாவும், ஜனதா கல்விக்கென இரு கல்வி வலயத்திற்கும் ரூபா 84,000மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது முறைசாராக் கல்விக் கண்காட்சிக்கும், கலை நிகழ்ச்சிகளை நடாத்தவும் யாழ் கல்விவலயம் 1ற்கு ரூபா 60.000 மும், கல்விவலயம் 2 ற்கு ரூபா 80,000 மும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

நாளை கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் மதியம் 12 00 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## பாலாபழனூர் ம. தி மு. கவில்

(சென்னை)

ஜனதா தளம் கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஏ. பாலா பழனூர் வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துள்ளார்.

இவர் சரண்சிங் பிரதமராக இருந்தபோது அ. இ. அ. தி. மு. க. சார்பில் மத்திய அமைச்சராக நியமனம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது;

## எம்பிலிப்பிட்டிய கொலை சட்டமா அதிபர் வழக்கு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய கொலைகள் தொடர்பாக சட்ட மா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. 1989இல் அரசு [illegible] கொண்ட ஜே. வி. பி. எதிர்ப்பு பொலிஸ் - இராணுவ நடவடிக்கையின்போது 31 பள்ளி மாணவர்கள் காணாமற் போனது தெரிந்ததே.

சட்ட மா அதிபர் திணைக்களம் மூன்று முறைகளில் இந்த வழக்கை அணுகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஒன்று நீதியரசர் சூசா ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில்- மற்றது குற்றப் புலனாய்வுத் துறை அறிக்கையின் அடிப்படையில்' மூன்றாவது காணாமற்போன 31 பேர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு வழக்கின் தீர்ப்பைப் பொறுத்தது.

மாணவர்களை யார் கடத்திச் சென்றார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை- ஆனால் காணாமல் போனவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று நாம் அனுமானிக்கலாம். சூரியகந்தவிலிருந்து 25 மைல்களுக்கு அப்பால் 'முதிரைக் காட்டில்' 31 மாணவர்களும் எரிக்கப்பட்டார்கள் என்பதுதான் எமக்குக் கிடைத்துள்ள ஆதாரம் ஆகவே சூரியகந்தவில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கும் மாணவர்கள் கொலைக்கும் சம்பந்தமில்லை என்று சட்ட மா அதிபர் தெரிவித்துள்ளார்-

## குண்டுவெடிப்பு தொடர்பாக 200 பேர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில்கடந்தமாதமுற் பகுதியில்இடம்பெற்ற குண்டு வெடிப்புதொடர்பாக500க்கு மேற்பட்ட வீடுகள் கொழும்பு நகரப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சோதனையிடப்பட்டதாகவும் சுமார் 200 பேர்வரை கைதுசெய்யப்பட்டதாகவும்சிறிலங்காவின்குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வீடு வீடான சோதனை நடவடிக்கைகள் மொரட்டுவப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# இலக்கிய படைப்பு பரிமாறலில் வடக்கு-கிழக்கு இணைய வேண்டும்

**- து. வைத்திலிங்கம்**

(குருநகர்)

''ஒரு இனம் தன்னை இனம் காட்டும் விதத்தில் கலை, பண்பாடு, மொழி ஆகிய விழுமியங்களில் வரையறுக்கப்பட்ட நிலைப்பட்டுக்கு அப்பாலேதான் வர்க்க பேதமற்ற ஒரு சமூக அமைப்பைத் தோற்றுவிக்க அவாவுற வேண்டும். அதனையே உலகளாவிய நேக்கில் அனுமானிக்க முடிகிறது.''

கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ் ஆரியகுளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்ற மட்டுநகர் எழுத்தாளர் திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) எழுதிய ''இல்லத்தரசி'' சிறுகதை நூல் அறிமுக விழாவில் கருத்துரை நிகழ்த்துகையில் பிரபல எழுத்தாளர் திரு. செங்கை ஆழியான் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் இலக்கிய வட்ட ஆதரவில் நடைபெற்ற அறிமுக விழாவுக்கு இலக்கிய வட்ட தலைவர் திரு து. வைத்திலிங்கம் தலைமை வகித்தார்,

திரு. செங்கை ஆழியான் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''மட்டுநகர் எழுத்தாளர் அன்புமணி 1952களில் இருந்து எழுதி வந்தபோதும் அவர் எந்த இலக்கிய அமைப்புகளுக்கு உள்ளும் அமைந்திராத பண்பினை அவரது எழுத்துகள் காட்டி நிற்கின்றன'' இவ்வாறு அவர்தெரிவித்தார்.

## கலை, சட்டத்துறை மாணவருக்கு கடிதம்

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படவிருக்கும் கலை, சட்டத்துறை மாணவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அவர்கள் கொடுத்துள்ள முகவரிகளுக்கு அடுத்தவாரம் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை 1993 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களிடமிருந்து 1995 ஆம் ஆண்டில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கு அவர்களிடமிருந்து அடுத்தமாதம் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## மாகாணசபைக்கு மேலும் எழுதுவினைஞர் நியமனம்

(யாழ்ப்பணம்)

மாகாணசபை எழுதுநர் சேவைக்கும், அதனோடு இணைந்த சேவைகளுக்கும் மேலும் ஒரு தொகுதியினரை [illegible] டுப் புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன. 109இல் இருந்து 100ஆகவும், சலுகைப் புள்ளிகள் 88இல் இருந்து 80ஆகவும் குறைக்கப்பட்டுள்ளதாக

தலை உரிய காலத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் அறிய முடிகின்றது. டி.பி-விஜேதுங்காவின் இம்முடிவானது அவரின் அரசியல் குறிக்கோளை மட்டுமல்ல, கட்சிக்குள் அவரின் சர்வாதிகாரத்தைக் காட்டுவதாகவுமே உள்ளது.

டி.பி விஜேதுங்கா செயற்குழுவின் சிபார்சையும், அரசியல் சட்ட விவகார அமைச்சினது ஆலோசனையையும் நிராகரிக்கக் கூறிய கருத்துக்கள் இன்னமும் வெளிவரவில்லை. ஆயினும், உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதே நல்லது; ஜனநாயக மரபிற்கு ஏற்றது போன்ற காரணங்களைக் கூறியிருக்க முடியும். ஆனால், உண்மைக் காரணங்கள் அதுவல்ல. ஆட்சி அதிகாரத்தை மீண்டும் பிடிப்பதற்கும் கைப்பற்றிய பின் தனக்கு ஏற்றாற்போல் பாராளுமன்றம் ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டதாகும்.

செயற்குழுவின் சிபார்சின்படி பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தினால் அதன் முடிவுகள் ஜனாதிபதி தேர்தலை தெளிவாகவே பிரதிபலிக்கும் என்பது டி பியின் எண்ணமாகும். அது பிழையானதும் அல்ல. அதாவது, பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தால் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கிட்டுவது தவிர்க்க முடியாததாகும். அத்தோடு, குழம்பிய நிலையில் உள்ள ஐ. தே. கவிற்குள் தேர்தல் வேட்பாளரை நியமிப்பது என்பது பல நெருக்கடிகளை உருவாக்கும் என்பதும், அது உட்கட்சிப் பூசலை மேலும் விரிவாக்கும் என்பதும் உண்மை. இந் நிலையில், ஐ. தே. க. மேலும் பலவீனப்படவே வாய்ப்பு அதிகம்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதினால் ஓரளவேனும் இம்முரண்பாட்டைக் குறைக்க முடியும் என டி. பி. கருதுகின்றார். பாராளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்திருக்கும் அரசியல்வாதிகள் - ஐ. தே. க - ஜனாதிபதித் தேர்தலில் வேறுவழியின்றி டி பிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியே ஆகவேண்டும் இதன் மூலம் டி. பி. ஜனாதிபதித் தேர்தலை ஓரளவாவது நம்பிக்கையுடன் எதிர்கொள்ள முடியும்.

இதேசமயம் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் பாராளுமன்றத் தேர்தலில் தமக்குத் தேவையானவர்களை வேட்பாளர்களாக நிறுத்தி தனக்கு ஒத்திசைவான பாராளுமன்றத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லாது தோல்வியைச் சந்திக்க வேண்டி வருமானால், பின்னர் பாராளுமன்றத் தேர்தலைப் பற்றி டி. பி. அவ்வளவு பொருட்படுத்த வேண்டிய அவசியம் இராது. அதேசமயம், பொதுத் தேர்தலின்போது டி. பி விஜேதுங்கா ஐ. தே. க வின் தலைவராக இருப்பாரா என்பதும் கேள்விக்குரியதாகவே இருக்கும்.

இந்நிலையில், டி. பி. விஜேதுங்காவின் முடிவானது, அவர் ஐ. தே. கட்சியின் நலன் என்பதை விட தனது பதவியையும், அதிகாரத்தையும் நிலைநாட்டுவதிலேயே அக்கறையாக உள்ளதைக் காட்டுகின்றது. அத்தோடு சிறிலங்கா அரசியல் அமைப்பானது ஜனநாயக அமைப்பு என்பதை விட சர்வாதிகாரிகளை உருவாக்கும் அமைப்பு என்பதை இதுமேலும் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

# ஒளிமயமான வாழ்க்கைக்கு ஆரம்பக்கல்வியே ஆதாரம்

**—பா. செல்வரத்தினம்**

(தொல்புரம்)

ஒரு மனிதனின் ஒளிமயமான வாழ்க்கை ஆரம்பக் கல்வியில் தான் தங்கியுள்ளது. அடிப்படைக் கல்வியை சிறந்த போதனா முறையில் பெற்றுக் கொண்டால் நாம் என்றும் முழுமனிதனாக வாழ வழிகள் பல உருவாகவும், உயர்கல்வி என்பதனை சிரமமின்றி பெறுவதற்கும் எதிர்காலத்தில் இடம் உண்டு என்பதை பாலர் கல்வியின் அவசியம் நன்கு தெளிவுபடுத்துகிறது.

இவ்வாறு யாழ் தேசிய சர்வோதய மாவட்ட நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறைவு விழாவின்போது தலைமை வகித்து உரையாற்றிய மாவட்ட இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், இப்பாலர் கல்வி பயிற்சியின் மூலம் ஒவ்வொரு பாலர் ஆசிரியரும் நிச்சயமாக தத்தமது கிராமங்கள் தோறும் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க பாலர் கல்வியை சிறப்பாக போதிப்பதோடு, சமூக மேம்பாட்டிற்காக தம்மாலான அறப்பணிகளையும் தொடரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. க அருண், தேசிய சர்வோதய தலைமை அலுவலக பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. எஸ் வி. சங்கரப்பிள்ளை என்போர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவினை ஆரம்பித்து வைத்தனர்.

# சித்த வைத்திய மருந்தாளர் பயிற்சி நடப்பது மகிழ்ச்சி

**- சுந்தரம் டிவகலாலா கூறினார்**

(நல்லூர்)

'இந்த நெருக்கடியான காலகட்டத்தில் சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் மருந்தாளர் பயிற்சிகளை நடாத்துவதையிட்டு நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். எந்த வேலையையும் பயிற்சி பெற்றவர்கள்தான் செய்வது வரவேற்கத்தக்கது. ஆங்கில மருந்துகள் கூடச் சில இடங்களில் மருந்தைப்பற்றி அறிவில்லாதவர்களாலும், பயிற்சி பெறாதவர்களாலும் விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் சில சமயங்களில் உயிராபத்துக்கூட ஏற்படலாம்' இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

சித்த வைத்திய ஆராய்ச்சி மன்ற மண்டபத்தில் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் தலைமையில் சித்த மருந்தாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஆயுர்வேத வைத்தியத்துறைப் பணிப்பாளர் உரோ மகேஸ்வரன் பேசுகையில், சித்த வைத்தியத்தில் மருந்தாளர் பயிற்சி வேறு எவரும் வழங்கவில்லை. உலகில் வேறு எங்கும் காணப்படவில்லை. எமது மண்ணிலே நடக்கிற புரட்சி இதுவாகும் சித்த மருந்துகளின் தடைதான் இந்த மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

சித்த மருத்துவத் துறையில் கல்வி கற்று வெளியேறுபவர்கள் சித்த வைத்தியம் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். சித்த மருத்துவ முறை இந்தியாவில் இல்லை. யாழ்ப்பாணத்தில்தான் இத்துறையைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த ஜீவசேவை வைத்திய பரம்பரையினரைத்தான் சாரும் என்று கூறினார்.

தலைமையுரையில் திரு. து. வைத்திலிங்கம் கூறியதாவது! ''நிஜ வாழ்க்கையில் வடக்கையும் கிழக்கையும் இணைக்க முனைகின்றோம். ஆனால் இலக்கியப் படைப்புகளின் பரிமாற்றத்தில் இணைக்க இன்னமும் முயலவில்லை'' என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் கருத்துரையில், ''இலக்கியப் பண்பு காணப்படும் அன்புமணியின் சிறுகதைகளில் சமூகப்பணி மிகவும் குறைவாகக் காணப்படுகிறது ஆயினும் மட்டக்களப்பு மண்வளத்தை அவரது கதைகளில் தரிசிக்கக் கூடியதாக இருக்கிறது.

இத்தொகுதியில் அடங்கியுள்ள கதைகள் 25 வருடங்களுக்கு முன்பாக எழுதப்பட்டதன் காரணமாக பெரிய மனிதரும், பாடும் மீனும் தவிர்ந்த ஏனைய கதைகளில் யதார்த்த தன்மையைக் காணவில்லை'' என்றார்.

அறிமுகவுரையை திரு ந- சிவபாதமும், வரவேற்புரையை திரு- ஐயா சச்சிதானந்தனும் நிகழ்த்தினர்-

(21)

## புலிகளின் குரல்

### நிகழ்ச்சி நிரல்

1994-05-11 புதன் இரவு

08.01 - குயிலோசை 'சுரண்டல்களைச் சுட்டெரிப்போம்' கிராமிய நிகழ்வு.

08 20 - ஏர்முனை-'எண்ணெய்ப் பயிராக முத்தாமணக்கு'

08.30 - செய்திகள்

08.40 - நாடகம் 'விளைவு'

1994 05.12 வியாழன் காலை

07.02 - மாவீரவணக்கம்

07.15 - விடுதலைக் கீதங்கள்

07 30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - விடுதலைக்கீதங்களின் தொடர்ச்சி

மேலும் ஒரு தொகுதியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேவைக்காக ஆட்திரட்டும் வகையில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றுமொரு தொகுதியினருக்கு இச்சேவைகளில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கு நியமிக்கப்படவுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக ஏற்கனவே நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் வெட்டுக் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மத்திய அரசு சேவைக்கு விருப்புரிமை தெரிவித்து குறைந்த புள்ளிகள் பெற்று மாகாண அரசசேவையில் சேர்த்துக் கொள்வதற்கு விருப்புரிமை தெரிவித்தவர்களுக்கும் நேர்முகப்பரீட்சை மூலம் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரை யாழ் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்

# மூத்த பொலிஸ் அதிகாரிக்கு 'கருங்காலி' கடத்தல்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு லொறியில் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்பட்ட கருங்காலித் தளபடங்கள் அனுராதபுரப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. நான்கு பொலிசாரும் ஒரு சப் - இன்ஸ்பெக்டரும் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டனர்.

கருங்காலி மரங்கள் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டு கலன்பிந்துனவேவ காட்டுப் பகுதியில் கருங்காலித் தளபாடங்கள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கருங்காலித் தளபாட கடத்தலுடன் சம்பந்தப்பட்ட கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

# மைலாப்பூர் பெருந்துறைக்கு மத். பார்வையாளர் விரைவு

(சென்னை)

மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் எதிர்வரும் 29ஆம் திகதி காலையில் தான் அறிவிக்கப்பட முடியும் என்றும் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கே. சந்திரகுடன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இம்மாதம் 26ஆம் திகதி இத் தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெற்று 28ஆம் திகதி வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டாலும் கூட 29ஆம் திகதி காலைக்கு பின்னர் தான் முடிவுகள் தெரியவரும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை மைலாப்பூர் தொகுதிக்கு இருவரும் பெருந்துறை தொகுதிக்கு இருவருமாக மொத்தம் நான்கு பேர் மத்திய பார்வையாளர்கள் குழுவில் தமிழகத்திற்கு வருகை தந்துள்ளனர்.

# இந்தியா கவலை

(டில்லி)

பாகிஸ்தான் எப் 16ரக விமானங்களை கொள்வனவு செய்ய விருப்பதையடுத்து பாதுகாப்பு தொடர்பாக இந்தியா தனது நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டி ஏற்பட்டிருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

# ஆசிரிய பற்றாக்குறை நிரப்ப அரச அதிபருக்கு அதிகாரம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் நிலவும் ஆசிரிய பற்றாக் குறையை நிரப்பும் அதிகாரம் உரிய மாவட்ட அரச அதிபர்களுக்கு வழங்க நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது வடக்கு கிழக்கில் 5000 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன.

இன்னமும் தொண்டர் ஆசிரியர்கள் பலருக்கு நிரந்தர நியமனம்வழங்கப்படவில்லை. எனவே மாவட்ட அரச அதிபர்கள் மூலம் வெற்றிடங் களை அடையாளம் கண்டு விண்ணப்பங்களைக்கோரி புதிய நியமனங்களை வழங்க அண்மையில் நடைபெற்ற தேசிய புனர்வாழ்வுக்கு மாநாட்டின் போது அதிகாரம் வழங்கப்பட்டது.

கல்வித் திட்டமிடல் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் கலாநிதி இராமனுஜத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்தை இது குறித்து பெற நடவடிக்கை எடுக்கு மாறு தேசிய புனர்வாழ்வுக் குழுக் கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் அண்மையில் நடைபெற்ற எழுதுநர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் மாகாணசபைக்கு விண்ணப் பித்தோரின் வெட்டுப்புள்ளி 80ஆககுறைக்கப்பட்ட போதிலும் மத்திய அரசசேவைக்கு விண்ணப்பித்தோருக்கு 110 ஆக வெட்டுப்புள்ளிதீர்மானிக் கப்பட்டது குறித்தும் மாநாட்டில் ஆராயப்பட்டு இரு சாராருக்கும் வெட்டுப்புள்ளி 80ஆகவே குறைக்க இம் மாநாட்டில் முடிவு செய்யப் பட்டது.

## மாணவர், ஆசிரியர் விபரம் அனுப்பி வைக்கப் பணிப்பு

(நல்லூர்)

பாடசாலையிலுள்ள மாணவர்கள், ஆசிரியர் விபரங் களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. டபிள்யூ நாணயக்கார சகல கோட்டக் கல்வி அலுவலகங் களுக்கும் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களை யும் கேட்டுள்ளார்.

இவ் விபரத்தில் தற்போது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியுள்ள மாணவர்கள், தற்போது பாடசாலையில் கல்விப் போதனை செய்யும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களும், பாடசாலையிலுள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பாடசாலையின் கட்டடம் சம்பந்தமான விபரங்களும் சேர்க்கப்பட வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (17)

## சிங்கள இணைப்பாளர்கள் சர்வோதயம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வவுனியாவிலும் கிழக்கு மகாணத்தில் திருக்கோணமலையிலும் சர்வோதய நிறுவனம் தமிழர்களுடன் சிங்கள மக்களுக்கு பணிபுரியும் நோக்கில் சிங்கள இணைப்பாளர்களையும் நியமனம் செய்துள்ளது

இதன் மூலம் சிங்கள மக்களுக்கு சேவை செய்வதில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்கலாம் என சர்வோதயம் கருதுகிறது.

உலகநாடுகளிடமிருந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக் கென ஒதுக்கப்படும் நிதிஇதன் மூலம் சிங்கள மக்களைப் போய்ச் சேர்கிறது எனத்தெரிவிக்கப்பட்டது

இதே சமயம் வடக்கு - கிழக்கில் தமிழ்மக்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும்ஒரே அளவான உதவிகளை செய்வதில்தான் சர்வோதயம் ஈடுபட்டுள்ளது என இதன் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகளினூடாக 15ஆம் சட்ட மண்ணெண்ணெய் விநியோகத்தை நாளை முதல் மேற்கொள்ள உள்ளது. (க)

## பரீட்சை

கணக்காளருக்கான வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும் அப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை பரீட்சைத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும் படியும் பரீட்சை ஆணையாளர் அறிவித் துள்ளார்.

## தமிழ்

மாநாடுகள் முறையே தமிழ் நாடு (சேலம்) மலேசியா, மொறிசியஸ், அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் நடைபெற்றமை தெரிந்ததே,

## ஜேர்மன்

வுச் செயலாளரின் பௌன் பயணம் குறித்து எமக்கு அறி

## நேற்று

கிறது. இந்நிகழ்ச்சியில் உலக நாடுகளைச்சேர்ந்த சுமார் 1500விருந்தினருடன் லட்சக் கணக்கான கறுப்பினத்தவர் களும் கலந்துகொண்டனர்.

மண்டேலா பதவி ஏற்ற போது பதவி ஏற்பு மேடையில்

# ஹேமாவுக்கு பதவி வழங்க நாம் பதவி துறக்கத் தயார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காக நான் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கத் தயார். ஆனால் அதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக செல்ல வேண்டியது திருமதி ஹேமா பிரேமதாசாவே தவிர காமினி திசாநாயக்கா அல்ல என காளிங்க ஒபயசேகர தெரிவித்துள்ளார்:

நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவிக் கையில் ஹேமா பிரேமதாசாவுக்கு பாராளுமன்ற உறுப் பினர் பதவி மட்டும் வழங்கக் கூடாது அவருக்கு அமைச்சர் பதவியும் வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இதே வேளை தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எச். அமீர். அலெக்ஸ் றொபின்சன் ஆகியோரும் இதே கருத்தையே தெரிவித்தனர்.

## எம். பிக்கள்

அநேகமாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை மையமாக வைத்து இவ் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இப்படியான மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஏழு சந்திப்புகள் நடை பெற்று இருப்பதாகவும் ஏனைய மாவட்ட உறுப்பினர் களுடனான சந்திப்பு விரை வில் நடைபெறும் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## போதிய

போதிலும் தனக்கு போதிய பாதுகாப்பு வழங்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை என தெரிவித்துள் ளார்.

## காமினியின்

கலாநிதி சரத் அமுனுகம லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவராக பதவி ஏற்று மாகாண சபை உறுப்பினர் பதவியை துறந்துள்ளார் காமினி திஸ்ஸநாயக்காவும் எம்பியானால் அவரின் மாகாணசபை உறுப்பினர் பதவியும் வெற்றிடமாகும்.

## கடற்படை

யகமாகக் கொண்ட கிழக்கு பிராந்திய கடற்படை தளபதியாக இடமாற்றப்பட்டுள் ளார்- பதில் கொமடோரான டி டபிள்யூ.கே. சந்தகிரி வட பிராந்திய கடற்படை தளபதி பொறுப்பிலிருந்து தற்காலிகமாக கிழக்கு பிராந்தியத்திற்கு மாற்றப்பட்டுள் ளார்- பதில் கொமடோர் ஜே ரி.ஜி சுந்தரம் வடபகுதி தற்காலிக கடற்படை தளபதியாக பதவி வகிக்கிறார். இவர்கள் தொடர்ந்து பதில் கொமடோர்களாகவே பதவி வகிப்பர் இருவரும் கப்டன் பதவியை ஐந்து வருடங்களாக ஆற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றங்கள் தற்

## சந்திக்கவும்

பட்டதாரிப் பயிலுநர்களாக 1 வருடம் சேவையை முடித்து அல்லது சேவையில் இருந்து கொண்டு பட்டம் பெற்று ஒருவருடம்சேவையை முடித்து நிரந்தர பட்டதாரி நியமனத்திற்கு விண்ணப்பித் தும் இதுவரை நிரந்தர பட் டதாரி ஆசிரியர் நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை மாலை 3-30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் கூடி தமது விபரங்களைச் சமர்பிக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் கோரியுள்ளார்.

இவ்விபரங்களை அடுத்த வாரத்தில் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சிற்கு நேரடியாக சங்கப் பிரதிநிதி யொருவர் எடுத்துச் சென்று அவர்களின் நியமனக் கடிதங்களை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குக் கிடைக்க சங்கம் ஆவன செய்யுமென சங்

# மரண அறிவித்தல்கள்



பிறப்பு
25-9-76

இறப்பு
8-5-94

செல்வி

## நாகநந்தினி இசக்கி ஆச்சாரி (நந்தினி)

யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி (A/L)வர்த்தகம்C
08 05-94 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு திருமதி இசக்கி ஆச்சாரிபிச்சம்மா அவர்களின் அன்பு மகளும், நாகம்மா, கிருஷ்ணசாமி, கந்தசாமி, பாக்கியராஜா, விஜியலெட்சுமியின் அன்பு சகோதரியும், கந்தசாமி, விஜயகுமாரி, ஞானேஸ்வரியின் மைத்துனியும், திரு வண்ணமுத்து செல்லாச்சி தம்பதிகளின் பெறாமகளும், சுப்பையா ஆச்சாரியின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 11 - 5 - 1994 புதன் கிழமை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்
சா. இசக்கி ஆச்சாரி
(தகப்பன்)

74, இந்துக் கல்லூரி ஒழுங்கை
யாழ்ப்பாணம். (8254)

## திரு. வே. சுந்தரலிங்கம்

திரு. வே. சுந்தரலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், டிறிபேக் கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், நந்தக்குமார் (பிரத்தியேக ஆசிரியர்), உதயக்குமார் (கனடா), சுந்தரக்குமார் (பிரதம பொறியியலாளர், நிருமாணத் திணைக்களம் யாழ்), மாலதி (மிருக வைத்தியர் வவுனியா), சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சஞ்சயன், கீர்த்தனா, தீபனா, நேதாஜி, பிருதுவி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-05-94 புதன் (இன்று) காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்

க. பொ. த

1993 க. பொ. த. (சா-த) பரீட்சை விடைத்தாள்களும் தாமதமாகவே எடுத்துச் செல்லப்பட்டு திருத்தப்பட்டமையும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது.

மேலும் இப்பரீட்சை இங்கு இனி எப்போது நடைபெறும் என்பது பற்றி இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது (ப)

பயணம் குறித்து எமக்கு அறிவுறுத்தல் எதுவும் இல்லை என்றார்.

திலகரெட்ணாவின் பொன் பயணம் குறித்து முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் பொன் நகரிலுள்ள சிறிலங்காத் தூதுவரிடமிருந்து மேலதிக விபரங்களை எதிர்பார்க்கிறோம் என்று வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# இன்று முதல்

சாவகச்சேரி

## தெய்வேந்திரா திரையரங்கில்

தினசரி 6. 30 காட்சிகளாயும்,

சனி, ஞாயிறு தினங்களில்

10. 30, 2. 30, 6. 30 காட்சிகளாயும்

# தில்லானா மோகனாம்பாள்

(கலர்)

(சி-9386)

## யாழ் ஸ்ரீதரில்...

தினசரி மாலை 4, 6 மணி

சனி, ஞாயிறு காலை 10, 30

மாலை 4, 6 மணி

# காற்றுவெளி

(சி-9370)

போது பதவி ஏற்பு மேடையில் புதிய தென்னாபிரிக்க தேசியக் கொடி ஏறியபோது வெள்ளையின கறுப்பின மக்களின் தேசிய கீதங்களான இரு பாடல்களும் இணைத்து பாடப்பட்டன.

கறுப்பின பெரும்பான்மை ஆட்சியின் கீழ் ஐக்கியம், ஒரு முக்கிய அம்சம், தென்னாபிரிக்காவின் அரசியல் அமைப்பையும் ஏனைய சட்டங்களையும் கடைப்பிடித்து பேணிப்பாது காக்கப்போவதாகவும் அனைவருக்கும் நீதி கிடைக்கப்படுத்தப்போவதாகவும் நெல்சன் மண்டேலா தனது பதவி ஏற்பு உரையில் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க மக்கள் மனித குலம் தம்மை மீண்டும் அரவணைத்துள்ளதுஎன்பதை உணருகின்றனர். ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த நாம் எமது சொந்த மண்ணிலேயே உலக நாடுகளுக்கு விருந்தோம்பும் வாய்ப்பை பெற்றிருக்கின்றோம் என்பதை தென்னாபிரிக்க மக்கள் உணருகின்றனர். என மண்டேலா தெரிவித்தார்.

புதிய தேசிய அரசு சிறைத்தண்டனை அனுபவிக்கும் பல்வேறு தரப்பினரான மக்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். விடுதலைக்குரிய பாதை சுலபமானதல்ல நாம் தனித்து செயற்படுவதால் வெற்றியை அடையமுடியாது என்பதை நன்றாக அறிவோம் ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்கும் அனுபவம் மீண்டும் ஏற்படக்கூடாது என மண்டேலா தனது உரையில் தெரிவித்தார்

## பொலிசர்

பொலிசார் கொல்லப்பட்டு அவரின் ரி-56 துப்பாக்கியும் அபகரிக்கப்பட்டது. இது தொடர்பாக கைதான ஒருவர் கொடுத்த தகவலையடுத்து மேற்படி நபரும் கைதானார். இவர்கள் ஜிகாத் அமைப்பை சேர்ந்தவர்கள் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாற்றங்கள் தற்போது ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்காக காத்துள்ளன.

## காமினியை

காமினிதிசாநாயக்கா மற்றும் பிரேமதாசா குடும்பத்தினருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்காக தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் பதவி விலகி இடம் கொடுக்க வேண்டும் என்றும் இதுவே பிரேமதாசாவுக்குச் செலுத்தும் நன்றி எனவும் கட்சிப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தேசியப் பட்டியல் உறுப்பினருக்கும் கட்சி பொதுச்செயலாளருக்கும் இடையே காரசாரமான விவாதம் நடைபெற்றுள்ளது. தேசிய பட்டியல் உறுப்பினர் காளிங்க ஒபயசேகரவுக்கும் பொதுச் செயலாளருக்கும் இடையே சுமார் ஒருமணி நேரத்திற்கு மேலாக விவாதம் நடைபெற்றதாக தெரியவருகின்றது

இதனைத் தொடர்ந்து விவாதம் உச்சக்கட்டத்தை அடைந்த நிலையில் கூட்டம் ஒத்திப்போடப் பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது

## கொலராவிற்கு

இவர் இந் நோயினால் 12 தினங்கள் பீடிக்கப்பட்டிருந்து பின்னர் மரணமானார். (யோ)

## தலைவிரி

செய்யப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று பற்றி கடத்திய பல பெண்களை தற்போது சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக தடைசெய்யப்பட்ட பொருள்களை கடத்தியதற்கான குற்றச்சாட்டின் கீழ் சிறிலங்கா நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரியர்களுக்குக் கிடைக்க சங்கம் ஆவன செய்யுமென சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் வி. கழகம் இணுவில் மகாஜனக் கல்லூரியில் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகள்

இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் வட்டுக்கோட்டை வி. கழகத்தை எதிர்த்து மாளிபாய் சில்வஸ்ரர் வி. கழகமும் முதலாம் பிரிவு ஆட்டத்தில் விநாயகர் ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து யங் கென்றிஸ்வி கழகமும் விளையாடவுள்ளன.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(குருநகர்)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொழிற்சங்கப்பொறுப்பாளர் திரு இமையவன், யாழ். காவல்துறைப்பொறுப்பாளர், யாழ். வட்டவைப் பொறுப்பாளர் திரு செந்தமிழன் ஆகியோர் உரையாற்றுவர். புதிய நிர்வாகத்தெரிவும் நடைபெறும். (21)

## வீரவணக்கக் கூட்டம்

சாவகச்சேரிக்கோட்டத்தில் 5ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7 30 மணியளவில் சாவகச்சேரி சித்திவிநாயகர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

புதன் (இன்று) காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடி பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அரசினர் வைத்தியசாலை முன்பாக
சாவகச்சேரி
(8244)

தகவல்
சு. சுந்தரக்குமார்
(மகன்)
(பிரதம பொறியியலாளர்
யாழ்ப்பாணம்)

## திருமதி இராசம் கதிர்காமதம்பி

அல்வாய் மேற்கு, அருணர் வளவைச் சேர்ந்த திருமதி இராசம் கதிர்காமத்தம்பி 10-05-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் திரு. சு. கதிர்காமத்தம்பி (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சி. தில்லைநாயகி (வசந்தா), செல்வன் க. சபாநாயகம் (சபா) (தமிழீழ காவல்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. கி. சிவலிங்கத்தின் மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-05-94 புதன்கிழமை (இன்று) காலை 10.00 மணிக்கு திக்கம் குடும்ப மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

அருணர் வளவு
அல்வாய் மேற்கு,
அல்வாய்
(சி-9387)

தகவல்:
சபா
(மகன்)

## கண்ணீர் அஞ்சலி

நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளரும் யாழ் மாவட்ட நிறைவேற்று பொறியியலாளருமான

**திரு. சு. சுந்தரகுமார்**

அவர்களின் தந்தையார்

## அமரர் வே. சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

(8253)

நிர்மாணத் திணைக்கள ஊழியர்கள்
முல்லைத்தீவு அலுவலகம்

# வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Nallur Branch Library